**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 36 /2016**

**PW 13**

| | | |
|---|---|---|
| Name | : | தமிழரசி |
| Father's/Husband's Name | : | ராஜேந்திரன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.02.2025.

**A1, 3, 4, 5 and 7 present. A2 absent. 317 Crpc petition filed and allowed.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது வேலூர் தெற்கு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் . நான் கடந்த 06.01.2015 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு . வெங்கடாசலம் என்பவர் திருவண்ணாமலை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று வாதி கல்பனா வயது 28, த/பெ. பரசுராமன், ரா.அகரம் கிராமம் என்பவரிடம் பெற்று வந்த புகார் வாக்குமூலத்தினை நான் பரிசீலனை செய்து நிலைய குற்ற எண் . 3/2015, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307 இதச - ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.8. அந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்குஅனுப்பி வைத்தேன். வழக்கை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்காக வைத்தேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் நான் நேரடியாக பெறவில்லை என்றால் சரிதான் . வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லப்படும் வெங்கடேசன் என்பவரை நான் விசாரிக்கவில்லை. அவர் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை . அ.சா.1 நான் சொல்வது போல் வெங்கடாசலம் என்பவரிடம் எந்த புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . இறந்த நபருக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அ .சா.1 டம் கையொப்பம் வாங்கி பின்னர் புகார் வாக்குமூலமாக பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல . புகார் வாக்குமூலத்தில் அதை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரின் கையொப்பத்திற்கு கீழ் வருடம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தவறான புகாரின் அடிப்படையில் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல . வெங்கடாசலத்திடம் அ .சா.1 எந்த புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-Gopinath.,
Additional District Judge,
Tiruvannamalai.